முன்னெடுத்துச் செல்வோர்
MINISTRY OF HEALTH
SINGAPORE

# மேலும் ஆரோக்கியமான எஸ்ஜி திட்டம் நாட்பட்ட நோய் மருந்துகளை உங்களுக்குக் கட்டுப்படியாகும் விலையில் வழங்குகிறது




## மேலும் ஆரோக்கியமான எஸ்ஜி நாட்பட்ட நோய்ப்பிரிவு என்பது என்ன?



1 பிப்ரவரி 2024 முதல், சமூக சுகாதார உதவித் திட்ட (CHAS) அட்டை / முன்னோடித் தலைமுறை / மெர்டேக்கா தலைமுறை அட்டை வைத்திருப்போரில் அதிகமான மருந்துகள் தேவைப்படுவோர், மேலும் ஆரோக்கியமான எஸ்ஜி திட்டத்தின் கீழ் தாங்கள் பதிவு செய்திருக்கும் தனியார் மருந்தகங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட மருந்துகளுக்குக் கூடுதல் மானியங்களை பெற்று அனுபவிக்கலாம்.

## இது உங்களுக்கு என்ன நன்மையளிக்கும்?




- தேர்ந்தெடுக்கப்பட்ட நாட்பட்ட நோய் மருந்துகளுக்கு, டாலர் வரம்பின்றி, பலதுறை மருந்தகங்களுக்கு நிகராக 87.5% வரை மானியம்.
- மருத்துவ ஆலோசனை, பரிசோதனைகள் போன்ற இதர பராமரிப்புக் கூறுகளுக்கு ஆண்டுக்கு $360 வரை மானியம்.
- கைக்காசு தேவையில்லை - நாட்பட்ட நோயைச் சமாளித்தல் திட்டத்தின்கீழ் இடம்பெறும் நாட்பட்ட நோய்களுக்கான சிகிச்சைக்கு மெடிசேவ் பயன்படுத்தி முழுமையாகப் பணம் செலுத்தலாம். இது மெடிசேவ் பணமெடுப்பு வரம்புக்கு உட்பட்டது.

## யாரெல்லாம் தகுதி பெறுகிறார்கள்?



- மேலும் ஆரோக்கியமான எஸ்ஜி நாட்பட்ட நோய்ப்பிரிவு அதிகமான மருந்துகள் தேவைப்படுவோருக்கு நன்மையளிக்கும்.
- நோயாளிகள் மருந்தகத்திற்கு வருகையளிக்கும் ஒவ்வொரு முறையும், தங்களுக்குத் தேவைப்படும் மருந்துகளின் அடிப்படையில் தங்களுக்குச் சிறந்த பயனளிக்கும், CHAS நாட்பட்ட நோய்ப்பிரிவை அல்லது மேலும் ஆரோக்கியமான எஸ்ஜி நாட்பட்ட நோய்ப்பிரிவைத் தேர்ந்தெடுக்கலாம். வருடாந்திர மானியத்தொகை கால விகிதப்படி கணக்கிடப்படும்.

மேலும் அறிய
ஸ்கேன் செய்யவும்

உங்களுக்குத் தேவைப்படும் மருந்துகளின் அடிப்படையில், மேலும் ஆரோக்கியமான எஸ்ஜி நாட்பட்ட நோய்ப்பிரிவின் மானியங்களை நீங்கள் பயன்படுத்திக்கொள்ள முடியுமா என்பது பற்றி உங்கள் குடும்ப மருத்துவரிடம் ஆலோசனை பெறுங்கள்.

**மேலும் ஆரோக்கியமான எஸ்ஜி நாட்பட்ட நோய்ப்பிரிவு வழங்கும் நன்மைகளுடன் பயனடைய மேலும் ஆரோக்கியமான எஸ்ஜி திட்டத்திற்குப் பதிவு செய்யுங்கள்.**

முன்னெடுத்துச் செல்வோர்
MINISTRY OF HEALTH
SINGAPORE

# மேலும் ஆரோக்கியமான எஸ்ஜி நாட்பட்ட நோய்ப்பிரிவின் நன்மைகள்




மானியங்களுடன் நீங்கள் எவ்வாறு நன்மை அடையலாம் என்பது பற்றிய மேல்விவரங்களைக் கீழ்க்காணும் அட்டவணையில் தெரிந்துகொண்டு, இன்றே உங்கள் குடும்ப மருத்துவரிடம் ஆலோசனை பெறுங்கள்.

| மேலும் ஆரோக்கியமான எஸ்ஜி நாட்பட்ட நோய்ப்பிரிவு<br>நாட்பட்ட நோயைச் சமாளித்தல் திட்டத்தில் (CDMP) இடம்பெற்றுள்ள நோயாளிகளுக்கு | | | CHAS பச்சை அட்டை | CHAS ஆரஞ்சு அட்டை | CHAS நீல அட்டை | மெர்டேக்கா தலைமுறை | முன்னோடித் தலைமுறை |
|---|---|---|---|---|---|---|---|
| **தேர்ந்தெடுக்கப்பட்ட நாட்பட்ட நோய் மருந்துகள்***<br>*மேலும் ஆரோக்கியமான எஸ்ஜி மருந்துப் பட்டியலில் உள்ள மருந்துகள். பலதுறை மருந்தகங்களில் பொதுவாகப் பயன்படுத்தப்படும் மருந்துகள் இதில் உள்ளடங்கும்.<br> | சிக்கலற்ற அல்லது சிக்கலான நாட்பட்ட நோய்(கள்) | சதவீத மானியம் | 50% மானியம், டாலர் வரம்பு இல்லை | 75% மானியம், டாலர் வரம்பு இல்லை | 75% மானியம், டாலர் வரம்பு இல்லை | 81.25% மானியம், டாலர் வரம்பு இல்லை | 87.5% மானியம், டாலர் வரம்பு இல்லை |
| **நாட்பட்ட நோய் பராமரிப்புச் சேவைகள் மற்றும் பிற மருந்துகள்**<br>மருத்துவ ஆலோசனை, பரிசோதனைகள் போன்ற சேவைகளும், மேலும் ஆரோக்கியமான எஸ்ஜி மருந்துப் பட்டியலில் இல்லாத மற்ற மருந்துகளும்.<br> | சிக்கலற்றது (ஒரே ஒரு நாட்பட்ட நோய்) | ஒரு வருகைக்கு | $28 வரை | $50 வரை | $80 வரை | $85 வரை | $90 வரை |
| | | ஓர் ஆண்டுக்கான உச்சவரம்பு | $80 | $130 | $210 | $230 | $240 |
| | சிக்கலானது (பற்பல நாட்பட்ட நோய்கள், அல்லது பல்வேறு சிக்கல்கள் உள்ள ஒரே ஒரு நாட்பட்ட நோய்) | ஒரு வருகைக்கு | $40 வரை | $80 வரை | $125 வரை | $130 வரை | $135 வரை |
| | | ஓர் ஆண்டுக்கான உச்சவரம்பு | $110 | $210 | $330 | $350 | $360 |

## நான் CHAS திட்டத்தைத் தேர்ந்தெடுப்பதா அல்லது மேலும் ஆரோக்கியமான எஸ்ஜி நாட்பட்ட நோய்ப்பிரிவைத் தேர்ந்தெடுப்பதா?



- ஒவ்வொரு வருகையின்போதும், நீங்கள் தற்போதைய CHAS நாட்பட்ட நோய்ப்பிரிவு அல்லது புதிய மேலும் ஆரோக்கியமான எஸ்ஜி நாட்பட்ட நோய்ப்பிரிவு ஆகிய இரண்டில் ஒன்றின்கீழ் மானியங்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.
- நாட்பட்ட நோய்க்கு அதிகமான மருந்துகள் தேவைப்படுவதால் தற்போதைய CHAS திட்டத்தின் வருடாந்திர மானிய வரம்புகளைவிட அதிகக் கட்டணம் செலுத்தும் நோயாளிகள் பெரும்பாலும் நன்மை அடைவார்கள்.
- மருந்துகள் குறைவாகத் தேவைப்படும் நோயாளிகள், தற்போதைய CHAS மானியங்களைத் தொடர்ந்து பயன்படுத்திக் கொள்ளலாம்.

மேலும் அறிய ஸ்கேன் செய்யவும்

உங்களுக்குத் தேவைப்படும் மருந்துகளின் அடிப்படையில், மேலும் ஆரோக்கியமான எஸ்ஜி நாட்பட்ட நோய்ப்பிரிவின் மானியங்களை நீங்கள் பயன்படுத்திக்கொள்ள முடியுமா என்பது பற்றி உங்கள் குடும்ப மருத்துவரிடம் ஆலோசனை பெறுங்கள்.

**மேலும் ஆரோக்கியமான எஸ்ஜி நாட்பட்ட நோய்ப்பிரிவு வழங்கும் நன்மைகளுடன் பயனடைய மேலும் ஆரோக்கியமான எஸ்ஜி திட்டத்திற்குப் பதிவு செய்யுங்கள்.**